[10th March 1961

SRI K. R. NALLASIVAM: காவேரி கடைக்கோடியில் தண்ணீர் வீணுகப் போவதாக கனம் அங்கத்தினர் குறிப்பிட்டார். காவேரிக்கு மேல் பகுதிகள், சேலம் ஜில்லா போன்ற பகுதிகளில் உள்ள விவசாயிகள் பம்ப்செட்கள் மூலம் அதிகப்படி தண்ணீரை எடுத்துக் கொள்வதற்கு வேண்டிய வசதி செய்து கொடுப்பது பற்றி சர்க்கார் யோசனை செய்யுமா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: அதுபற்றி என்னிடம் தகவல் இல்லை.

SRI V. SUBBIAH: ரிவர் பம்பிங் ஸிஸ்டம் எந்தெந்த ஜில்லாக்களில் எவ்வளவு பம்ப்கள் இப்பொழுது ஓடிக்கொண்டிருக்கிறது? எந்தளவு அவை வெற்றிகரமான முறையில் நடந்து கொண்டிருக்கின்றன?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: ராமநாதபுரம் ஜில்லாவில் இளையான்குடி, பெட்டுச்செட்டிப்பட்டி, சொர்ணம் பட்டி கோவிந்தநல்லூர், கிராமங்களில் இப்பொழுது எடுத்துக் கொள்வதாக உத்தேசம். திருநெல்வேலி ஜில்லாவில், மேல் ஆத்தூர், கல்லிக்குளம் இவைகளில் எடுத்துக் கொள்வதாக உத்தேசம். இவை விவசாய இலாகாவால் நிறைவேற்றப்படும்.

MR. SPEAKER: அடுத்த இரண்டு கேள்விகளையும் ஒன்ருக எடுத்துக்கொள்ளலாம்.

Beedi Factories Act

* 738 *Q.*—SRI V. K. KOTHANDARAMAN: கனம் கைத் தொழில் அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

பீடித் தொழிற்சாலை சட்டத்தின் 2 (g) [i] பிரிவு செல்லத் தக்கதல்ல என்று சென்னை ஐகோர்ட்டு தீர்ப்பளித்துள்ளதால் பீடித் தொழிலின் ட்ரேட் மார்க் முதலாளிகள் சட்டத்திலிருந்து தப்பிக்க வழி ஏற்பட்டுள்ளதால் அச்சட்டத்தின் 2 (g) பிரிவுக்கு திருத்தம் கொண்டுவர உத்தேசமுண்டா?

THE HON. SRI R. VENKATARAMAN: The matter is under consideration.

* 739 *Q.*—SRI V. K. KOTHANDARAMAN: கனம் கைத் தொழில் அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) வடஆற்காடு ஜில்லா பீடித் தொழிலாளர் சங்கத்திலிருந்து மாதிரி திருத்தங்களைப் பற்றி 1960-ம் ஆண்டு ஜனவரி மாதம் 30-ம் தேதி, 1960-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 7-ம் தேதிகளில் சர்க்காருக்கு விண்ணப்பங்கள் ஏதேனும் வந்துள்ளனவா?

(இ) அவைகளின் பேரில் எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?